J. R. T. S.] MISCELLANEOUS SERIES. [No. 19.

(A plain exhortation to those Idolaters who speak the Tamil Language to worship God through Christ.)

# தேவானகூலம்.

தமிழரே,

கிறிஸ்துமார்க்கப் போதகர்களாகிய நாங்கள் உங்கள் தேசத்தில்வந்துசேர்ந்து உங்களறியாமையையும் உங்கள்கிருத்தியங்களையும் பார்க்கிறபொழுது எங்களுக்கு மிகுந்ததுக்கமுண்டாயிருக்கிறது. நீங்களிந்த உலகத்திற் சிட்டிக்கப்பட்ட காரணமின்னதென்றும் உங்கள் ஆத்துமா இன்னதன்மையுள்ளதாயிருக்கிறதென்றும் மரணம் அடைகிறபொழுது உங்கள் ஆத்துமா இன்னவிடத்திற்குப்போமென்றும் உங்களுக்குத்தெரியாது.

உங்களுக்குச் சீவனையும் அன்னவஸ்திராதிகளையுங் கொடுக்கிற தேவனுண்டென்று நீங்கள் அறிக்கையிடுகிறீர்கள். ஆகிலும் இன்னவின்ன தன்மையுள்ளவராயிருக்கிறாரென்று நீங்களறியவுமில்லை, விசாரிக்கவுமில்லை. உங்கள் குருக்

1st. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5000
1843.

க்கள்மார் ஒரு கல்லையாவது ஒருதுண்டுமரத்
தையாவது தேவனென்று சொன்னால் நீங்கள் உ
ங்களுக்குண்டான புத்தியின்படி யோசனைப
ண்ணாமல் இலகுவாய் அதை நம்புகிறீர்கள்.
மோட்சமென்னப்பட்ட பாக்கியமுள்ள ஒரு
இடமும் நரகமென்னப்பட்ட நிர்ப்பாக்கியமு
ள்ள ஒரு இடமுமுண்டென்றும் மோட்சம் எங்
களுக்கு வேண்டுமென்றும் நீங்களெல்லாரும்
சொல்லுகிறீர்கள். ஆகிலும் அந்த நரகத்துக்கு
த் தப்பி மோட்சத்தையடையும்படிக்கு வகை
உங்களுக்குத் தெரியவில்லை. உங்கள் குருமார்
பாவத்தை நீக்கி மோட்சத்தை அடையும்படிக்
கு இந்த இடத்திலே ஸ்நானம்பண்ணவேண்டு
மென்றும் இந்தச்சுவாமிக்கு நைவேத்தியஞ்
செய்யவேண்டுமென்றும் இப்பேர்ப்பட்ட ச
டங்குகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும்
இப்படிப்பட்ட வருத்தங்களைச் சகிக்கவேண்
டுமென்றும் உங்களுக்குச் சொன்னால் யோச
னைபண்ணாமலதையும் நம்புகிறீர்கள். நீங்கள்
கொஞ்சமாகிலும் யோசனைபண்ணிப்பார்த்தா
ல் இப்படிப்பட்ட ஸ்நானங்கள் பலிகள் சடங்கு
களினாலே பாவம்போகமாட்டாதென்றும்மோ
ட்சங் கிடையாதென்றும் இலகுவாய் உங்களு
க்குத் தெரியவரும். உங்கள்பாவங்களை நீக்கும்ப
டிக்கும் உங்களை மோட்சத்தில் அடைவிக்கும்ப
டிக்கும் ஒரு இரட்சகருண்டென்றும் அவரை
யே விசுவாசிக்கவேண்டுமென்றும் உங்களுக்கு
த்தெரியாது. உங்கள் உள்ளத்திலே இருக்கிறது

ற்குணங்களுந் துராசைகளும் நீக்கப்படுவது உங்கள்சொந்தத் திராணியினாலேயல்ல, தேவனாகிய பராபரனுடைய வல்லமையினாலுங் கிருபையினாலுமாக வேண்டுமென்றும் அவர்மாத்திரம் நல்லகுணங்களையும் நல்லவிருப்பங்களையுங் கொடுக்கத் திராணியுள்ளவராயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியாமலிருக்கிறீர்கள். பராபரனுக்குப் பிரியமுள்ளவர்களுமாய் மோட்சத்துக்குத் தகுதியுள்ளவர்களுமாயிருக்கும்படிக்கும் ஒருவரையொருவர் சிநேகித்துச் சகலகாரியங்களையும் நீதி நியாயத்தின்படி நடப்பிக்கவேண்டுமென்றும் நீங்கள் அறியீர்கள். அந்த அறியாமை நீங்கள் மெய்த்தேவனை அறியாமல் அவரை அசட்டைபண்ணி அவர்கொடுத்த வேதத்தைத் தள்ளுகிறபடியினாலே உண்டாயிருக்கின்றது.

தேவனானவர் பெருவாரிக்காய்ச்சலினாலும் வாந்திபேதியினாலும் வைசூரியினாலும் பஞ்சத்தினாலும் உங்களைத்தண்டிக்கிறார். அப்பொழுதும் நீங்கள் விக்கிரகங்களிடத்திற்குட்போய் விண்ணப்பம்பண்ணிப் பலியிட்டுப் பலவிதமாய் விக்கிரகாராதனை செய்கிறீர்கள். அப்படிச் செய்கிறதினாலே இரட்சிப்பு உங்களுக்கு வரவில்லை.

இவைகளையெல்லாம் நாம்பார்க்கிற பொழுது மிகவுந் துக்கிக்கிறோம். சனங்களே, எதுவரைக்கும் நீங்கள் அறியாமையிலே தங்குவீர்கள்! எதுவரைக்குந் தேவன் பயங்கரமான தண்டனைகளினாலே உங்களை நெருக்கவேண்டும்?

எறுவரைக்கும் நீங்கள் அவரை அசட்டைபண்ணி அவருடைய கட்டளைகளை மீறிநடப்பீர்கள்? புத்தியடையுங்கள் அஞ்ஞான இருளையும் விக்கிரகங்களையும் விட்டு மெய்த்தேவனையும் அவர் இட்டகட்டளைகளையும் அறிந்து அவைகளின்படி செய்வீர்களாக. அப்பொழுது உங்கள் சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் நன்மையுண்டாகும்.

அறியவேண்டிய தேவனுரென்று நீங்கள் கேட்டால் வானத்தையும் பூமியையும் நம்மையும் மற்ற யாவரையும் யாவற்றையும் உண்டாக்கிக்காப்பாற்றி அன்னவஸ்திரம் முதலானவைகளைக் கொடுத்திரட்சிக்கும்படிக்குத் தம்முடைய ஒரேபேருன குமாரனுகிய இயேசுக்கிறிஸ்துவை இந்த உலகத்தில் அனுப்பின ஒரேதேவனுகிய கடவுளை அறியவேண்டும்.

நாங்கள் கைக்கொள்ளவேண்டிய திவ்வியவிசேட கற்பனைகளெவையென்றால் மெய்த்தேவனுகிய பராபரனையேயன்றி வேறுதேவர்களை வணங்காதிருப்பீர்களாகவென்றும், விக்கிரகங்களைவைத்து வணங்காதிருப்பீர்களாகவென்றும், பராபரனுடைய திருநாமத்தை வீணுய்ப் பேசாதிருப்பீர்களாகவென்றும், ஞாயிற்றுக்கிழமையிலே வேலைசெய்யாமல் அதைப்பரிசுத்தமாய் ஆசரிப்பீர்களாகவென்றும், பிதாமாதாவைக் கனம்பண்ணுவீர்களாகவென்றும், கொலைசெய்யாதிருப்பீர்களாகவென்றும், விபசாரம்பண்ணுதிருப்பீர்களாகவென்றும், களவுசெ

ப்பியாதிருப்பீர்களாகவென்றும், பொய்ச்சாட்
சி சொல்லாதிருப்பீர்களாகவென்றும், பிறனு
டைய வீட்டையும் மனைவியையும் வேலைகார
னையும் வேலைகாரியையும் பிறனுக்குள்ள மற்
றயாதொன்றையும் இச்சியாதிருப்பீர்களாக
வென்றும், சொல்லப்பட்டவைகளும் பிறவு
மே.

இந்தக்கட்டளைகளைக் கடவுள் உங்களுக்கும்
மற்றயாவருக்குங் கொடுத்திருக்கிறார். அவைக
ளை நீங்கள் இப்பொழுது கைக்கொண்டு விசே
ஷிமாயுங்களுக்காக அந்தக்கற்பனைகளை நிறை
வேற்றிப் பாடுபட்டு மரணமடைந்த இயேசுக்
கிறிஸ்துவென்னும் இரட்சகரிடத்தில் விசுவாச
ம்வைத்து அன்ஞானத்தையும் பொய் வஞ்சனை
முதலான பாவங்களையும் விட்டு மெய்த்தேவ
னிடத்தில் மனந்திரும்பினால் இம்மையிலும் ம
றுமையிலும் உங்களுக்கு வரும் ஆசீர்வாதங்க
ளைக் கேளுங்கள். அவைகளை மெய்த் தேவனு
னவரே சொல்லியிருக்கிறார்.

எப்படியெனில்,

நீங்களென் கட்டளைகளின்வழியே நடந்து
அவைகளின்படியே செய்தால் தகுதியான கா
லத்திலே உங்களுக்குவேண்டிய மழைகளைப்
பெய்யப்பண்ணுவேன். பூமிதன்பலனையும் நி
லத்திலுள்ள மரங்கள் தங்கள்கனிகளையுங்கொ
டுக்கும் நீங்களுங்கள் ஆகாரத்தைத் திருத்தியா
கச்சாப்பிட்டு உங்கள்தேசத்திலே சுகமாய்க்கு
டியிருப்பீர்கள். தேசத்திலே சமாதானம் இரு

க்கச்செய்வேன். பயப்படுத்துவாரில்லாமற் படுத்துக்கொள்வீர்கள் துட்டமிருகங்கள் தேசத்தில் இராதபடிக்கும் ஒயப்பண்ணுவேன். கட்கம் உங்கள்தேசத்திற் சஞ்சரியாது நானுங்கள்மேற் கண்ணோட்டமாயிருந்து உங்களைத் தழைக்கவும் பெருகவும்பண்ணி என் வாசஸ்தலத்தை உங்களுக்குள்ளே ஏற்படுத்தி உங்களுக்குள்ளே உலாவிக்கொண்டு உங்களுக்குத்தேவனாயிருப்பேன். நீங்களெனக்குச் சனங்களாயிருப்பீர்கள். என்னுடைய தயையே என்னிற்பயபத்தியாயிருக்கிறவர்கள்மேலும் என்னுடையநீதி என்னுடைய கட்டளைகளின்படி செய்யநினைக்கிறவர்களுடைய புத்திரபௌத்திரர்மேலும் அநாதியாய் என்றென்றைக்குமுள்ளது. என்னிடத்திற்றிரும்புங்கள். அப்பொழுது நான் கிருபையுள்ளவராயிருக்கிறபடியினாலே உங்கள்மேற் கோபம்வையாமல் இருப்பேன். பாவத்தைக்குறித்து வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நானுங்களுக்காறுதல்செய்வேனென்று சொல்லியிருக்கிறார். ௩. மோ. ௨௬. அதி. ௪, ௫, ௬. ௯. ௰௧, ௰௨. வசன. ௱௩. சங்கீ. ௰௭. ௰௮. வசனம், யெரேமி. ௩. அதி. ௰௨. மத்தே. ௰௧. அதி. ௨௮. வசனம்.

அவர்அருளிய கற்பனைகளைக் கைக்கொள்ளாமலும் அவர்அனுப்பின இரட்சகனை விசுவாசியாமலும் இருக்கிறவர்களுக்கும் அவர்கள்பின்

ளைகளுக்கும் வரும் சாபத்தைக் கேளுங்கள். நீங்களென்னுடைய சொற்கேளாமலும் இந்தக் கற்பனைகளெல்லாவற்றின்படி செய்யாமலும் அவைகளைத் தள்ளினால் உங்களுக்கு நான் செய்வதென்னவென்றால் கண்கள் பூத்துப்போகப்பண்ணுகிறதற்கும் ஆத்துமாவை இளைப்பாக்குதற்கும் எதுவான பயங்கரத்தையும் ஈளையையும் சுரத்தையும் உங்களிற் பிரவேசிக்கப்பண்ணுவேன்.

உங்கள்விதையை வீணாகவிதைப்பீர்கள். உங்களுக்கு விரோதமாயிருப்பேன். உங்கள்பகைஞர் உங்களை ஆண்டுகொள்வார்கள்.

இப்படியாயும் பின்னும் நீங்கள் என்னுடைய சொற்கேளாமற்போனால் நானுங்கள் பாவங்களுக்காகப் பின்னும் ஏழுமடங்காய் உங்களைத் தண்டித்து உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து உங்கள்மேலிருக்கிற வானத்தை இரும்பைப் போலவும் உங்கள்கீழிருக்கிற பூமியை வெண்கலத்தைப் போலவும் இருக்கப்பண்ணுவேன். உங்கள் பெலன் வீணாகச்செலவழிக்கப்படும். உங்கள் தேசம் தனது பலனையும் தேசத்தின்மரங்கள் தங்கள் கனிகளையுங் கொடாமற்போம். இப்படியாயும் நீங்கள் என்சொற்கேளாமல் எனக்கெதிர்த்து நடந்தால் நானுங்கள் பாவங்களுக்குத் தக்கதாகப் பின்னும் ஏழுமடங்கான வாதைகளை உங்களிற் பிரவேசிக்கப் பண்ணித் துஷ்டமிருகங்களை உங்களுக்குள்ளே புகவிடுவேன். அவைகள் உங்களைப் பிள்

ளைகளற்றவர்களாக்கி உங்கள் பிருகசெந்துக்களை அழித்து உங்களைக் குறைந்துபோகப்பண்ணும். உங்கள்வழிகள் பாழாய்க்கிடக்கும். மேலும் என்குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைத் தீர்க்கதரிசியாகவும் இரட்சகராகவும் நிறுத்துவேன். ஆர் என்நாமத்தினாலே சொல்லும் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவனை நான் தண்டிப்பேன். அவரை விசுவாசியாதவன் நரகாக்கினைக்குள்ளாக்கப்படுவானென்பதே. ௩. மோ. ௨௬. ௰௫. ௩௩. ௪. மோ. ௰௮. ௰௯. மாற். ௰௬. ௰௬.

தேவனானவர் தம்மைத் தொழுதுகொள்ளாமலுந் தம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமலுந்தாம் அனுப்பின இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசியாமலும் போகிறவர்களை இவ்விதமாய்த் தண்டிக்கிறேனென்று இப்பொழுது அவருடைய வாயினாலே சொல்லியிருக்கிறவைகளைக் கேட்டுக்கொண்டீர்கள். அந்தப் பயங்கரமான தண்டனைகளிற் சிலவற்றை நீங்களிப்பொழுது கண்ணாலேயுங் காண்கிறீர்கள். அல்லாமலும் இப்பொழுது நீங்கள் பரமண்டலத்திலிருந்துபேசுகிறவரை அசட்டைபண்ணி அவருடைய வசனத்துக்குச் செவிகொடாமலும் பேய்களையும் பொன் வெள்ளி செம்பு கல் மரத்தாற் செய்யப்பட்டவைகளுமாய்க் காணவுங் கேட்கவும் நடக்கவும் மாட்டாதவைகளுமாயிருக்கிற விக்கிரகங்களையும் உங்கள்கொலைபாதகங்களையுஞ் சூனியங்களையும்வே

சித்தனங்களையுங் களவுகளையும்விட்டு மனந்திரும்பாமலும்போனால், (எபி. ௰௨. ௨௫. வெ. ௯. ௨௰. ௨௧.) எழுமடங்காயுங்களைத்தண்டிப்பேனென்றும் என்னுடைய தண்டனைக்குத் தப்பிப்போகமாட்டார்களென்றுங் கர்த்தர் சொல்லியிருக்கிறார். வேசிக்கள்ளரும் விக்கிரகாராதனைக்காரரும் விபசாரக்காரருஞ் சுயபுணர்ச்சிக்காரரும் ஆண்புணர்ச்சிக்காரருந் திருடரும் பொருளாசைக்காரரும் வெறியரும் உதாசனரும் கொள்ளைக்காரரும் மோட்ச இராட்சியத்தைச் சுதந்தரியாமல் நரகமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கையடைவார்களென்று வேதத்திலே தெளிவாச்சொல்லியிருக்கின்றது. ௧ கொரி. ௬., ௯ ௰. வெளி. ௨௧. ௮. கலா. ௫. ௰௯, ௨௧.

இப்படியிருக்க நீங்களென்ன செய்யப்போகிறீர்கள். தேவகுமாரனுமாய் உலக இரட்சகருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்து காண்பிக்கிற மார்க்கத்திலேயன்றி வேறுமார்க்கத்திலே மோட்சங்கிடையாதென்று இப்பொழுது நீங்கள் கேட்டுக்கொண்டீர்களே. அந்த இரட்சகரையும் அவர்காட்டுகிற மார்க்கத்தையும் எங்களுக்கு வேண்டாமென்றுசொல்லி அசட்டைபண்ணினால் உங்களுக்கென்ன பிரயோசனங்கிடைக்கும்! நீங்கள் அவரோடே தருக்கம்பண்ணலாமா! பண்ணியும் நிலைக்கமாட்டீர்களே. அப்படியிருக்க நாங்களிப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிற புத்திகளைக் கேளுங்கள். கர்

சித்தனங்களையுங் களவுகளையும்விட்டு மனந்திரும்பாமலும்போனால், (எபி. ௰௨. ௨௫. வெ. ௯. ௨௰. ௨௧.) எழுமடங்காயுங்களைத் தண்டிப்பேனென்றும் என்னுடைய தண்டனைக்குத் தப்பிப்போகமாட்டார்களென்றுங் கர்த்தர் சொல்லியிருக்கிறார். வேசிக்கள்ளரும் விக்கிரகாராதனைக்காரரும் விபசாரக்காரருஞ் சுயபுணர்ச்சிக்காரரும் ஆண்புணர்ச்சிக்காரருந் திருடரும் பொருளாசைக்காரரும் வெறியரும் உதாசனரும் கொள்ளைக்காரரும் மோட்ச இராட்சியத்தைச் சுதந்தரியாமல் நரகமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கையடைவார்களென்று வேதத்திலே தெளிவாச்சொல்லியிருக்கின்றது. ௧. கொறி. ௬., ௯ ௰. வெளி. ௨௧. ௮. கலா. ௫. ௰௯, ௨௧.

இப்படியிருக்க நீங்களென்ன செய்யப்போகிறீர்கள். தேவகுமாரனுமாய் உலக இரட்சகருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்து காண்பிக்கிற மார்க்கத்திலேயன்றி வேறுமார்க்கத்திலே மோட்சங்கிடையாதென்று இப்பொழுது நீங்கள் கேட்டுக்கொண்டீர்களே. அந்த இரட்சகரையும் அவர்காட்டுகிற மார்க்கத்தையும் எங்களுக்கு வேண்டாமென்றுசொல்லி அசட்டைபண்ணினால் உங்களுக்கென்ன பிரயோசனங்கிடைக்கும்? நீங்கள் அவரோடே தருக்கம்பண்ணலாமா? பண்ணியும் நிலைக்கமாட்டீர்களே. அப்படியிருக்க நாங்களிப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிற புத்திகளைக் கேளுங்கள். கர்

தாயிருந்த கிருபையுள்ளவராயிருக்கிறபடியினா லே நீங்கள் அவருக்கு விரோதமான விக்கிரகாராதனை முதலான துராசாரங்களையெல்லாம் ஒழித்து மனஸ்தாபப்பட்டால் உங்கள் பாவங்களெல்லாவற்றையும் மன்னித்து அறியாமையுள்ள காலங்களைக் காணாதவர்போலிருப்பார். அன்றியும் சென்ற காலங்கள் அவரெல்லாப் புறத்தேசத்தாரையுந் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும் இப்பொழுது மனந்திரும்ப வேண்டுமென்று எவ்விடத்திலுமுள்ள மனிதர் யாவருக்குங்கட்டளையிட்டிருக்கிறார்.(அப்போஸ்தலர். ௰௪. ௰௬. ௰௭. ௩௰. ௩௧.) அவர் உங்களுக்கிரங்கித் தம்முடைய மிகுந்த அன்பினாலே உங்களை இரட்சிக்க மனதாயிருக்கிறாரென்பதற்குத் திட்டாந்திரத்தைக் கேளுங்கள்.

பராபரன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியசீவனை அடையும்படிக்கு அவரையே கொடுத்து இவ்வளவாய் உலகத்தாரில் அன்பாயிருந்தார். யோ. ௩. ௰௬.

அந்தத் தேவகுமாரனாகிய இயேசுக்கிறிஸ்து என்னும் இரட்சகர் இவ்வுலகத்தில்வந்து உங்களுக்காகவும் மற்ற யாவருக்காகவும் மனிதஅவதாரம்பண்ணிச் சத்தியத்தைப்போதித்து அனேகதுன்பங்களைச் சகித்துக்கொண்டு கடைசியிலே பாடுபட்டு மரணமடைந்து உயிர்த்தெழுந்தாரென்று நீங்கள் தாமே சுவிசேஷபுஸ்தகத்திலே வாசித்தறிந்துகொள்ளலாம். முன்னே அ

வர் பரமண்டலங்களிலே வாசம்பண்ணி அங்கேயிருந்த சகலபாக்கியங்களையும் மகிமைகளையும் அனுபவித்தார். தேவதூதர்களெல்லாரும் அவருக்கூழியஞ்செய்து அவரைத்தொழுதுகொண்டுவந்தார்கள். அவர் பாவந் துன்பம் முதலானவைகளினாலே நிறையப்பட்ட இவ்வுலகத்தில் வந்து இத்தேசத்திற்குச் சமீபமான கானான்தேசத்திலுள்ள பெத்லேகேமென்னுமூரிலே குழந்தையாய்ப்பிறந்தார். பின்பு அவர் வளர்ந்து பாவமில்லாதவராய் நடந்துகொண்டு முப்பதுவயதுள்ளவரானபொழுது அத்தேசத்திலெங்குந் திரிந்து அநேக அற்புதங்களைச்செய்து மோட்சத்தைக்குறித்தும் அதிலுள்ள பாக்கியத்தைக் குறித்தும் அதற்குப் போகிற மார்க்கத்தைக்குறித்துஞ் சனங்களுக்கு உபதேசம்பண்ணிக்கொண்டு பன்னிரண்டு சீஷர்களைத்தெரிந்து திவ்வியவசனத்தை அவர்களுக்குச் சுவிசேஷமாய்ப் போதித்துத் தாம் மரணமடைந்தபின்பு அவர்களும் அவர்களுக்குப்பின்வருகிற போதகரும் உலகமெங்கும்போய் அந்த நல்லசெய்திகளைச் சகல மனிதர்களுக்கும் பிரசங்கிக்கும்படிக்குக் கட்டளையிட்டார்.

இப்படி இயேசுவானவர் தம்முடைய சீஷருக்கும் மற்றவர்களுக்குஞ் சத்தியத்தைப் போதித்து அநேக நன்மைகளைச் செய்துவருகையில் அத்தேசத்திலிருந்த சனங்கள் அவர்மேற் பொறாமைகொண்டு அவரைப்பிடித்து மிகவும் வருத்தப்படுத்திச் சிலுவைமரத்தில் அறைந்

தார்கள். அதற்குத் தப்பிப்போகிறது அவருக்
கு இலேசானகாரியமாயிருக்கும். ஆகிலும் நம
க்காகவும் மற்ற யாவருக்காகவும் பாடுபட்டு மர
ணமடையும்படிக்கு அவர் இந்த உலகத்தில் வ
ந்தாரே. அவர் பாவஞ்செய்யாதவரானபடியி
னாலே மரணம் அவருக்கு வராது. ஆனாலும்
மனிதர்களெல்லாரும் பாவிகளாகி அதினிமித்த
ம் என்றென்றைக்கும் நரகத்திலே ஆக்கினை ச
கித்துக்கொள்ளுகிறதற்குப் பாத்திரரான படி
யினாலே அவர்களுக்காக அவர் பாடுபட்டு மர
ணமடைந்தார்.

அவரைவிசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறவக
ளைப் பரமபிதாத் தண்டியாமல் அவர்களுடை
ய பாவங்களைமன்னித்துத் தயவாய் மோட்ச
த்திலேசேர்ப்பார். மரணமடைந்தபின்பு அ
வருடைய சரீரங்கல்லறையிலே வைக்கப்பட்ட
து. ஆகிலும் முன்னே அவர்பலமுறை தம்மு
டைய சீஷர்களுடனே சொல்லியிருந்தபடியே
மூன்றும்நாளிலே உயிரடைந்து எழுந்திருந்து
அதினாலே அவர் தேவகுமாரனுமாய் உலகயிர
ட்சகருமாயிருக்கிறதைத் திட்டாந்திரப்படுத்தி
ப் பின்னும் நாற்பதுநாளளவுஞ் சீஷர்களுட
னே சஞ்சரித்துத் திவ்வியகாரியங்களை அவர்க
ளுக்கு அதிகமாய்ப் போதித்து அவர்கள் காண
த்தக்கதாகப் பரமண்டலத்துக்கேறிப்போனா
ர். அங்கே அவர் இப்பொது பிதாவுக்கும் எ
ங்களுக்கும் மத்தியஸ்தரான ஆசாரியராயிருக்
கிறார். அவரையறிந்து அவரிடத்தில் அன்புகூ

ர்ந்து விசுவாசித்து அவருடைய வசனத்தின்படி நடக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் அவருக்குக் குடிகளாயிருக்கிறார்கள். அவர்களை அவர் ஆண்டுகொள்ளுகிறதுமன்றி மிகுந்த கிருபைகளை அவர்களுக்கு அருளிச்செய்து அவர்களைக் காப்பாற்றிவருகிறார். அவரை அறியாமலும் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளாமலும் இருக்கிறவர்களெவர்களோ அவர்கள் அவருக்குச் சத்துருக்களாயிருக்கிறார்கள்.

கொஞ்சக்காலத்திற்குப் பின்பு அவர்பரமண்டலத்திலிருந்திறங்கிவந்து அவருடைய சத்துருக்களாகிய விக்கிரகாராதனைக்காரரையும் மகமதுமார்க்கத்தாரையும் ரோமான்மார்க்கத்தாரையும் அவர்களுக்குக் கீழ்ப்படியாத மற்றவர்களையும் அழித்து அவர்களை நரகத்திலேதள்ளுவார். அவரை விசுவாசித்து அவருக்கூழியஞ்செய்கிறவர்கள்மாத்திரம் அப்பொழுது சந்தோஷிப்பட்டுக் களிகூருவார்கள். அவர்களை அவர் சகலதீமைகளினின்றும் விடுதலையாக்கி என்றென்றைக்கும் மோட்சமகிமையை அனுபவிக்கும்படிக்கு மோட்ச இராச்சியத்திலே சேர்ப்பார்.

அப்படியிருக்க, நீங்களின்னம் உங்கள் ஆத்துமாக்களைக்குறித்துக் கவலைப்படாமலும் இராசாதி இராசாவாயும் இருக்கிற அந்த இரட்சகருக்குக் கீழ்ப்படியாமலுமிருக்கலாகாது. ஆகையாற் ருமதமில்லாமல் உங்களை இரட்சிக்கக்கூடாத விக்கிரகாராதனையையும் பாவம் முழு

வதையும்விட்டு உங்களைச் சிநேகிக்கிற மெய்த் தேவனையும் அவர் அனுப்பின இரட்சகரையும் அறிந்துவிசுவாசித்து அவருக்கே ஊழியஞ்செய்வீர்களாக. அப்பொழுது இம்மையிலும் மறுமையிலும் மிகவும் பாக்கியமுள்ளவர்களாய் இருப்பீர்கள்.

எங்கள் பரவணிமார்க்கத்தை விட்டுக் கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவுக்கூழியஞ்செய்தால் எங்கள் சாதியார் எங்களைத் தள்ளிப்போடுவார்களேயென்று நீங்கள் சொல்லிப் பயப்படாதிருங்கள்.

மனிதர்களிலும் தேவனானவர் அதிகவல்லமையுள்ளவர். அவரே உங்களைக் காப்பாற்றுவார். எங்களாலே கூடியமட்டும் உங்களுக்கு ஒத்தாசை செய்துவருவோம். பிதாக்குமாரனாகிய யேகோவாவுக்கு மகிமையும் மனித ஆத்துமாக்களுக்கு இரட்சிப்புமுண்டாவதாக.

---

என் நெஞ்சமே, நீ மோட்சத்தை
விரும்பித் தேடிக் கர்த்தரை
வணக்கத் துடனே
துதித்துப் பாடி என்றைக்கும்
புகழ்ச்சிசெய்து வாழ்ந்திரும்
மா பயத் துடனே.

அவர் இருப்பிடத்திலே
இருக்குந் தேவதூதரே
பாடுங்கள் தேவனை.
வணங்குங்கள் சாஷ்டாங்கமாய்
செலுத்துங்கள் மா பணிவாய்
ஏற்ற ஆராதனை.

நட்சத்திரங்கள் சந்திரன்,
வெயிலெறிக்குஞ் சந்திரன்,
ஆகாய சேனையே,
கிராணம், மின் முழக்கம்
வானங்கள் மேல் வானங்களும்,
செய்யுங்கள் துதியே.

விஸ்தாரமான பூமியே,
நீயும் எழுந்து வாழ்த்தல் செய்,
கர்த்தர் உன் ஆண்டவர்.
உன்னில் இருக்கும் யாவற்றும்
அவர் சொற்படி நடக்கும்,
கர்த்தாவே காரணர்.

எல்லை இல்லாச் சமுத்திரம்,
மா கோஷிட்டமுள்ள கடலும்
மோதி அடிக்கவே,
களிப்பாய் நீந்தும் மீன்களும்
மகா திமிங்கிலங்களும்
கர்த்தாவைப் போற்றவே.

டுன

வானோர், பூவோர், மா சேனையாய்
பூமியின் கீழோர் ஆழமாய்
வணங்க வாருங்கள்,
யெகோவா நாமே காரணர்,
சிந்திக்கவும் நடத்துவர்,
துதியாய்ப் பாடுங்கள்.